
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1315**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**80**

### தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய பெரியார், ‘பார்ப்பனரல்லாதோர்’ என்ற பரந்த அடையாளத்தின் கீழ், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், தலித்துகள் உள்ளிட்ட அனைத்து ஒடுக்கப்பட்ட பிரிவினரையும் ஒன்றிணைக்க முயன்றார்.

‘திராவிடர்’ என்ற ஒற்றை அடையாளத்தின் கீழ் அனைவரையும் அணி திரட்டினார். சாதி அமைப்பையும், இந்து ஆரிய உயர் சாதி மேலாதிக்கத்தையும், கடுமையாக விமர்சித்த அவர், மத நம்பிக்கைகளையும் விமர்சனத்துக்கு உட்படுத்தினார் என்றாலும், இஸ்லாமியர்களைச் சமூக நீதிக்கான கூட்டாளி களாகவே பார்த்தார்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களிலும், தமிழ் இன உரிமைப் போராட்டங்களிலும் இஸ்லாமியத் தலைவர்களுடன் இணைந்து செயல்பட்டார். எதிர்காலத்தில் சுயராஜ்ஜியம் அடையும்போது, சிறுபான்மையினரின் உரிமைகள் என்னவாக இருக்க வேண்டுமென்று கவலைப்பட்டார்.

பெரியாரின் அடியொட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் பேரியக்கம் கண்ட பேரறிஞர் அண்ணா, ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற முழக்கத்தின்மூலம் இஸ்லாமியர்களை தி.மு.கழகத்துடன் இன்னும் நெருக்கமாக்கினார். மனிதனை நல்வழிப்படுத்தும் உன்னதமான மார்க்கமாக இஸ்லாத்தைப் போற்றியதுடன், இஸ்லாமியர்களை அரசியல் பிரதிநிதித்துவம் காணவும் செய்தார். மத அடிப்படையிலான பாகுபாடின்றி, மொழி மற்றும் பிராந்திய அடையாளத்தை மையமாகக் கொண்ட அரசியலை அண்ணா முன்னெடுத்தார்.



மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

#### தனி உள் இட ஒதுக்கீடு

பெரியாரின் சிந்தனையும், அண்ணாவின் ஆற்றலும் கலந்த கலவையான முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில், சிறுபான்மையினரின் சமூகம், கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக, உறுதியான திட்டங்கள் சட்டவடிவம் பெற்றன. அவற்றுள் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை, இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்ட 3.5% தனி உள் இடஒதுக்கீடு மிக முக்கியமானது. அந்த இடஒதுக்கீடுதான் இஸ்லாமியர்களின் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு உரிமைகளை நிலைநிறுத்தியது. அத்துடன், ‘டாம்கோ’ (TAMCO) பொருளாதார மேம்பாட்டுக் கழகம், ‘உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்’ மற்றும் ‘உருது அகாடமி’ ஆகியவற்றின் மூலம் சிறுபான்மையினரின் பொருளாதாரப் பாதுகாப்புக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு வலுவான அரணைக் கட்டியமைத்தது. அது, ‘கட்டமைப்புகளின் கதாநாயகர்’ கலைஞரால் நிகழ்ந்தது.

அவர்களைத் தொடர்ந்து, ‘திராவிட மாடல் நாயகர்’ முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான, ‘திராவிட மாடல்’ அரசு இத்தோழமை மரபை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்சென்றது. ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட ‘குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA)’, ‘வக்ஃப் வாரியத் திருத்த மசோதா’, ‘காஷ்மீருக்கான சிறப்புரிமைப் பறிப்பு’, ‘திருப்பரங்குன்றம் விவகாரம்’, சிறுபான்மையினத் தொண்டு நிறுவனங்களின் வெளிநாட்டு நிதியுதவிகளை முடக்கும் முயற்சிகளுக்கு எதிராக, நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் தீர்க்கமாகப் போராடும் முதல் குரலாகத் திராவிட முன்னேற்றக் கழகமே விளங்கியது. சிறுபான்மைச் சமூகங்களின் கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான எண்ணிலடங்கா முயற்சிகளையும் திராவிட மாடல் அரசு ஈடற்ற வகையில், நிறைவேற்றியது.



## படகு கவிழும்; கப்பல்தான் கரை சேர்க்கும்!

திராவிட இயக்கம், சிறுபான்மையினருக்காகக் குரல் கொடுப்பதும், திட்டங்கள் தீட்டுவதும் தற்காலிகத் தேர்தல் உத்தியல்ல. மாறாக, அது ஒரு நூற்றாண்டுக்காலத் தீர்க்கமான கொள்கை முடிவு. அந்தக் கொள்கை முடிவுகளைத் தேர்தல் முடிவுகள் பாதிக்கவும் செய்யாது, பயமுறுத்தவும் செய்யாது. மாறாக, திராவிட முன்னேற்றக் கழகம் சிறுபான்மை மக்கள் மனத்தில் ஆழமாக விதைத்துள்ள நல்லிணக்கப் பொதுப்பண்பு. காலத்திற்கும் இருதரப்பு ஒற்றுமையை, உணர்வுபூர்வமான பந்தத்தை நீடிக்கச் செய்யும். அந்த உணர்வை உள்வாங்கும் பண்பில்லாமல், கப்பலில் இருந்து பாய்மரப் படகுக்குத் தாவுவதைப் போன்றது, தற்போதைய தேர்தல் முடிவுக்குப் பிந்தைய சில சம்பவங்கள்.

புயல் தேவையில்லை; பலத்த காற்றைக்கூட எதிர்கொள்ளும் திறன், அந்தப் படகுக்கு இல்லை என்பதை அவர்களுக்குக் காலம் உணர்த்தும். படகு சேதமாகும்போது, அவர்கள் மீண்டும் கப்பலுக்கு வந்து கரைசேருவதைத் தவிர, தாவிக் குதித்தவர்களுக்கு வேறு வழியில்லை.

> **“இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட மைனாரிட்டிகளுக்காக இந்தியாவில் தி.மு.கழகத்தைப்போல, வேறெந்த இயக்கமும் உறுதியாக நின்று உழைத்ததில்லை,”**

ஒட்டுமொத்த இஸ்லாமிய சமூகமும் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெருங்கப்பலில் பாதுகாப்பாக இருக்கும்போது, தாவிக் குதித்தவர்களைப் பற்றியும் கவலைப்படும் தன்மை இந்தக் கப்பலுக்குத்தான் இருக்கிறது. அதையும் காலம் உணர்த்தும். மக்கள் அங்கே இருக்கும்போது, நாம் மட்டும் தனிமைப்பட்டு தவிக்கிறோம் என அவர்களும் உணர்வார்கள். அந்த வகையில், உணர்ச்சிப் பெருக்கான பல சம்பவங்களையும் வரலாற்றுத் தரவுகளையும், சாதனைகளையும் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் தந்திருக்கிறோம் என்ற மனநிறைவுடன் இந்தத் தொடரை நிறைவு செய்கிறேன்.

இந்தத் தொடருக்கு, ‘மைனாரிட்டி தி.மு.க.’ என்ற பெயரை ஏன் தலைப்பாகச் சூட்டினீர்கள்? அம்மையார் ஜெயலலிதா நம்மை விமர்சிக்கப் பயன்படுத்தியது, இந்தப் பெயர். அதை நாம் ஏன் சூட்ட வேண்டும்?” என்று என்னிடம் சிலர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் சொன்ன பதில் இதுதான். கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்களை, “2-ஜி ராசா என விமர்சித்தவர்களுக்கு, ஆம். நான் 2-ஜி ராசா தான்” என்று நெற்றியடி பதிலைக் கொடுத்து, தொலைத்தொடர்புத் துறையில் அவர் ஆற்றிய இமாலய சாதனைகளை எடுத்துச் சொன்னார். “அந்தச் சொல் என்னை இழிவுபடுத்தாது, அது என் சாதனைகளுக்கான மகுடம்” என்றுக்கூறி, புனையப்பட்ட அந்த வழக்கையும் உடைத்தெறிந்தார்.

அதுபோலத்தான், ‘மைனாரிட்டி தி.மு.க.’ என்ற வார்த்தையை நானும் பயன்படுத்தினேன். இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட மைனாரிட்டிகளுக்காக இந்தியாவில் தி.மு.கழகத்தைப்போல வேறெந்த இயக்கமும் உறுதியாக நின்று உழைத்ததில்லை. ஆகையால், இது மைனாரிட்டி தி.மு.க.தான் என்று மார்தட்டிச் சொல்ல வேண்டுமென்பதற்காக இந்தச் சொல்லாடலைப் பயன்படுத்தினேன்.

சுயமரியாதை இயக்கக் காலகட்டத்தில் இருந்து இன்றைய GEN Z காலகட்டம் வரை சிறுபான்மையினரின் ஒவ்வொரு அசைவிலும், எதிர்கொண்ட ஆபத்துகளில் இருந்து காக்கும் ராணுவப்படையைப் போலவும் திராவிட இயக்கம், அதன் அரசியல் பேரியக்க வழித்தோன்றலான திராவிட முன்னேற்றக் கழகம் எப்படியெல்லாம் இணைந்து நின்றன என்பதை என்னால் முடிந்த அளவு இந்த ஒன்றரை ஆண்டுக்கால பயணத்தில் விளக்கியிருக்கிறேன். இன்னும் பேசப்படாத செய்திகள் ஏராளம் இருக்கலாம்; அறியப்படாத தகவல்கள் இன்னும் இருக்கலாம்; எழுதப்பட வேண்டிய பக்கங்கள் இன்னும் நீளலாம். எதிர்காலத்தில் அதைத் தேடி பயணிக்க விரும்புவோருக்கான திறவுகோலாக இந்தத் தொடர் இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த ஒன்றரை ஆண்டுக்கால பயணத்தில் ஒவ்வொரு வாரமும் என்னிடம் கருத்தைப் பகிர்ந்தவர்களுக்கும், சிறு சிறு குறைகளையும் சுட்டிக்காட்டியவர்களுக்கும், நிறைகளை வாழ்த்திப் பாராட்டியவர்களுக்கும், முரசொலி பாசறைப் பக்கத்தின் வாயிலாக இந்தப் பெரும் வாய்ப்பை வழங்கிய கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர், அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழகத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான எனது எழுத்துகள் நீளும்...

**...முற்றும்**

## நாசகாரச் செயலை, வரலாறு மன்னிக்காது!

‘திராவிடக் கட்சிகளை ஒழிக்க வேண்டும் என்னும் நாசகாரத் திட்டத்துக்கான ஆள்தான், நடிகர் விஜய்’ என சமூக வலைதளத்தில் தனது கருத்தைப் பதிவுசெய்துள்ளார், எழுத்தாளர் ம.மதிவண்ணன். அவருடைய பதிவிலிருந்து... “என்ன நடந்திருக்கிறது தமிழ்நாட்டில்? நடிகர் விஜய் யார்? அவர் யாருடைய ஆள்? இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்லும் முன், வேறொரு செய்தியை நினைவுபடுத்திப் பார்ப்போம்.

ஜெயலலிதா மரணமடைந்த சூழலில் என்ன நடந்தது? தலைமைச் செயலாளர் ராம்மோகன்ராவ் வீட்டிலும், தலைமைச் செயலக அலுவலகத்திலும் ஈ.டி. (E.D.) ரெய்டுகள். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஏகமனதாகத் தேர்ந்தெடுத்த சசிகலா பதவியேற்க அனுமதிக்கப்படாமல், சிறைக்கு அனுப்பப்பட்டார்.

‘தர்மயுத்தம்’. ‘கூவத்தூர்’, ‘எடப்பாடி தேர்வு’ ‘கரூர் அன்புநாதன்’ ‘சேகர் ரெட்டி’ ‘தினகரன் திகார் சிறை’ என்று எவ்வளவு எவ்வளவு நிகழ்வுகள் நடந்தன. அ.தி.மு.க. சூறையாடப்பட்டு, இன்று மிகப் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது.

இந்த நெருக்கடிகளில் எத்தனை சதவிகிதம் விஜய் தரப்புக்குத் தரப்பட்டது? 43 பேர் உயிர்ப் பலி வாங்கப்பட்ட வழக்கு குறித்த சி.பி.ஐ. விசாரணை இருந்தும், விஜய்க்கு எந்த நெருக்கடியும் இல்லை. இன்றைக்கு வடஇந்தியர்கள், மோடியைப் போலவே ‘விஜய் தள்பதி’ என்று வாஞ்சையாய்ப் பார்க்கிறார்களே ஏன்?

சமூக ஊடகங்கள் மூலமாக, தமிழ்நாட்டில் செய்த ‘செப்படி வித்தைகளை’ நாடு முழுவதிலும் செய்ய விட்டுவிட்டு, வலதுசாரிகள் ‘தேமே’ என்று பார்த்துக்கொண்டிருப்பார்களா? அப்படி நடக்கிறது என்றால், அதற்கு என்ன பொருள்?

தமிழ்நாட்டில் பா.ஜ.க. காலூன்ற முடியாது. ஆனால், திராவிடக் கட்சிகளை அழிக்க வேண்டும். அதற்காக, களம் இறக்கப்பட்ட ‘ப்ராக்ஸி’ (Proxy)தான், விஜய். அவர் பிரதமராவது பா.ஜ.க.வின் திட்டமில்லை. தமிழ்நாட்டிலுள்ள 39 எம்.பி.க்கள், தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட ஒரு ‘ஜெகன்மோகன் ரெட்டி’யின் வழியாக, தமக்கு ஆதரவாக இயங்க வேண்டும். இதுதான் பா.ஜ.க.வின் வேலைத்திட்டம்.

விஜய்யின் இன்றைய ‘கல்லாப்பெட்டிக் கூட்டணி’க்கு இந்தச் செய்திகள் தெரியாமல் இருக்குமா? இவை தெரிந்தும் பா.ஜ.க.வுக்கு Outsourcing வேலை பார்க்கிறார்கள் என்றால் என்ன பொருள்? இவர்கள் தெரிந்தே செய்யும் இந்த நாசகாரச் செயலை வரலாறு ஒருநாளும் மறக்காது; மன்னிக்காது என்று பொருள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



டி.ஜி.பாபு



### தலைவருக்குப் பொன்னாடை!

1993-ஆம் ஆண்டில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், கும்மிடிப்பூண்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு வருகைதந்தார். அப்போது, கும்மிடிப்பூண்டி பேரூராட்சி 4-வது வார்டு கிளைச் செயலாளராக இருந்த நான், தலைவருக்குப் பொன்னாடை அணிவித்து, வரவேற்பு அளித்து மகிழ்ந்தேன். 35 ஆண்டுகளுக்கும் மேல் அதே பற்று, உறுதியுடன் கழகப் பணியாற்றுவதில் மகிழ்கிறேன்.

**– டி.ஜி.பாபு, கலை இலக்கிய அணி,**
**ஒன்றிய துணை அமைப்பாளர்,**
**கும்மிடிப்பூண்டி கிழக்கு, திருவள்ளூர் (மா).**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### ஓயாமல் கிளர்ச்சி நடத்துவோம்!

1962-ஆம் ஆண்டு, மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா, இந்தித் திணிப்பை எதிர்த்து நீண்ட உரையாற்றினார். அந்த உரையில், “தொன்மையான மொழி படைத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிகளை, மதிக்க வேண்டும். ஆட்சிமொழியாக இந்தியைத் திணித்தால், அரசியல் கொந்தளிப்பு ஏற்படும் என்றே, தமிழர்கள் அனைவரும் கருதுகின்றார்கள். இந்திமொழி திணிக்கப்பட்டால், திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்து முழுமூச்சாக, ஓயாமல் கடுமையாகக் கிளர்ச்சி நடத்தும். அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் எதுவாக இருந்தாலும் சரி, நாங்கள் ஓயாமல் போராடுவோம்” என்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900